பக்கங்கள் 6 விலை சதம் 40 ★

# ஈழநாடு

The EELA NADU

மலர்: 19 வைகாசி 29 ஜ: ஆகிர்: 23 இதழ்: 120
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 11-6-77

# தமிழகத் தேர்தல் நாளை நடக்கிறது!

## 234 தொகுதிகளிலும் கடுமையான போட்டி

[நமது விசேஷ நிருபர்]

சென்னை, ஜூன். 10

தமிழக சட்டசபைத் தேர்தல், ஒரு பரபரப்பான சூழ்நிலையில் நாளை ஞாயிற்றுக் கிழமை நடைபெறுகிறது. முதல் கட்ட வாக்களிப்பு நாளையும், இரண்டாம் கட்ட வாக்களிப்பு பதினைன்காம் திகதி செவ்வாய்க் கிழமையும் இடம்பெறும்.

தமிழக சட்டசபையின்தேர்தல் ~~கடந்த 1970ம் ஆண்டு~~ நடைபெற்றதும் தி. மு. க. தலைவர் கலைஞர் மு. கருணாநிதி அதிகப்பெரும்பான்மை வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்பட்டு முதலமைச்சரானதும் வாசகர்கள் அறிந்ததே.

கடந்த பெப்ரவரி மாதம் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்த ஜனதா கட்சி, தமிழ்நாடு உள்ளிட்டு பத்து மாநிலங்களிலும், இரண்டு யூனியன் பிரதேசங்களிலும் தேர்தலை நடத்த முடிவு செய்தது. இதனைத் தொடர்ந்து தமிழக சட்டசபைத் தேர்தல் இப்பொழுது நடைபெறுகிறது.

இதற்கிடையே சில மாநிலங்களில் ஏற்கனவே சட்டசபைத்தேர்தல்கள் ஆரம்பமாகிவிட்டன. இந்தமாநிலங்களில் காலையில் வாக்களிப்பு மந்தமாக இருந்ததாகவும், பிற்பகலில் சுறுசுறுப்பானநிலையில் வாக்களிப்பு நடைபெற்றதாகவும் சமாச்சார் அறிவித்தது.

தமிழக சட்டசபைத் தேர்தலைப் பொறுத்தவரை 234 ஆசனங்களுக்கு நாளையும், செவ்வாய்க்கிழமையும் வாக்களிப்பு நடைபெறுகிறது. இத்தேர்தலில், திராவிடமுன்னேற்றக்கழகம், அனைத்து இந்திய அண்ணாதிராவிடமுன்னேற்றக் கழகம், ஜனதா கட்சி, காங்கிரஸ்கட்சி ஆகிய நான்குகட்சிகளே பிரதான அரசியல் கட்சிகளாகவிருக்கின்றன. திராவிட முன்னேற்றக்கழகம் அதிகக் கூடுதலான தொகுதிகளில் போட்டியிடுகிறது. இதற்கு அடுத்ததாக அ. இ. அ. தி. மு. கழகம் போட்டியிடுகிறது. இதன்பின்னர், ஜனதா கட்சியும், காங்கிரஸும்கூடுதலான தொகுதிகளில் போட்டியிடுகின்றன.

தி. மு. கழகம் தனித்துப் போட்டியிடுகிறது. அ. இ. அ. தி. மு. கழகம் மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சியுடனும், பார்வேர்ட்புளாக்குடனும் கூட்டுச் சேர்ந்து போட்டியிடுகிறது. தமிழகசட்டசபையின்மொத்த ஆசனங்கள் 234 ஆகும்.

தமிழக அரசியல் நோக்கர்களின் அபிப்பிராயத்தின்படி, தமிழ்நாடு சட்டசபைத் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தலின் போது ஏற்பட்டிருந்த நிலைமையிலும் பார்க்க சூடு பிடித்திருக்கிறது என்றும் தமிழகத்தை யார் அலங்கரிப்பார்கள் என்பதை திட்டவட்டமாகக் கூற முடியாதிருக்கிறதென்றும் தெரியவருகிறது.

தமிழகத்தை அ. இ. அ. தி. மு. கழகமா அல்லது தி. மு. கழகமா அல்லது ஜனதாவா அல்லது தி. மு. கழகம்-ஜனதா இணைந்த கூட்டணியா ஆளப் போகிறது என்பதை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டுமென்று அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

### அல்லைப்பிட்டியில்

# கார் - பஸ் விபத்து:

## ஒருவர் பலி; 7 பேர் காயம்!

யாழ்ப்பாணம், சனி

நேற்று பிற்பகல் சுமார் ஐந்து மணிக்கு அல்லைப்பிட்டிக்கு அருகாமையில் நிகழ்ந்த பஸ் - கார் விபத்தில், ஒருவர் மரணமானார், ஏழு பேரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளது.

இச் செய்தி அச்சுக்குப் போகும்வரை கிடைக்கப்பெற்ற செய்திகளின்படி ஊர்காவற்றுறையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த கார் ஒன்றின் சில்லு கழன்றுபோகவே எதிரே வந்த பஸ்ஸுடன் கார் மோதியதாகத் தெரிகிறது.

விபத்துக்குள்ளான கார் பிரயாணிகள் உடனடியாக யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர் என்றும் அனுமதிக்கப்பட்டவர்களில் புங்குடுதீவு மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த ஆசிரியர் எம். பரமலிங்கம் இறந்துபோனதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தவிபத்தில்காயமடைந்த சச்சிதானந்தன், பத்மநாதன், குணரத்தினம், பூலோகநாதன், மயில்வாகனம், கணேசமூர்த்தி, இளையதம்பி ஆகிய ஏழு பேர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

### தேர்தல் விபரம்

அடுத்த மாதம் 21-ம் திகதி நடைபெறும் பொதுத் தேர்தலில் போட்டியிடும் வடக்கு கிழக்கு, மாகாண அபேட்சகர்கள் விபரம், மற்றும் கடந்த (1970) தேர்தலின்விபரம் ஆகியவை திங்கட்கிழமை (13-6-77) "ஈழநாடு" பத்திரிகையில் வெளியாகும்.

## "இடி அமின் மற்றொரு ஹிட்லர்" - ஸாம்பியா ஜனாதிபதி

லண்டன், ஜூன் 10

உகண்டா ஜனாதிபதி திரு. இடிஅமின் மற்றொரு 'ஹிட்லர்' என்று லண்டனில் நடைபெறும் பொதுநல நாடுகளின் உச்சிமாநாட்டில் உரையாற்றிய ஸாம்பிய ஜனாதிபதி கலாநிதி கெனத் கௌண்டா கூறினார்.

உகண்டாவில் நடைபெறும் அட்டூழியங்கள் பலவற்றிற்கும் இடிஅமின் தான் காரணமென மாநாட்டில் கலந்து கொண்ட தலைவர்கள் பலரும் கண்டனம் தெரிவித்தனர்.

இதே வேளை, ரொடீஷியா பெரும்பான்மை இனத்தின் ஆட்சி ஏற்படுவதை தாம் எதிர்க்கவில்லை என்று ரொடீஷிய பிரதமர் திரு. இயன் ஸ்மித் கூறியுள்ளார்.

ரொடீஷியாவில் பெரும்பான்மை இனத்தவர் சித்திரவதைக்குள்ளாவதை லண்டன் மாநாட்டில் கலாநிதி கௌண்டா. கண்டித்திருந்தார். (உ)

# ரயில் சேவையில் மாற்றம்

யாழ்ப்பாணம், சனி

காங்கேசன் துறை-கொழும்பு ரயில்சேவைகள் இன்றுமுதல் வழமைபோல் நடைபெறும். ஆனால் காலையில் நடைபெறும் உத்தர தேவி நேரத்தில் மட்டும் மாற்றம்செய்யப்பட்டுள்ளது.

காலையில் 6-30க்கு யாழ்ப்பாணத்திலிருந்து புறப்படும் 'உத்தரதேவி' இனி காலை 8-30க்குத்தான் யாழ்ப்பாணத்திலிருந்து புறப்படும். இந்த ஏற்பாடு சில நாட்களுக்கு தொடர்ந்திருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதேபோன்று காலை எட்டு மணிக்கு கொழும்பிலிருந்து

(6ம் பக்கம் பார்க்க)

### ஐ. தே. க. ஆட்சிக்குவந்தால்

# சகல மாவட்டங்களுக்கும் அமைச்சர்கள் நியமனம்

## ஜே. ஆர். கூறுகிறார்

கொழும்பு, வெள்ளி

ஐக்கியதேசியக் கட்சி ஆட்சிக்கு வந்தால் ஒவ்வொரு மாவட்டத்துக்கும் ஒவ்வொரு அமைச்சர்களை நியமிப்போம் என்று ஐக்கிய தேசியக்கட்சித் தலைவர் திரு ஜே. ஆர். ஜெயவர்த்தனா கூறினார்.

எட்டியாந்தோட்டையில் நடைபெற்ற தேர்தல்பிரசாரக் கூட்டத்தில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

மாவட்டங்கள் தோறும் நியமனம் பெறும் அமைச்சர்களுக் காலோசனை வழங்கவும், திட்டங்களைச் சமர்ப்பிக்கவும் மாவட்டக்குழுக்கள் நியமிக்கப்படும். இக்குழுக்களில் கட்சிப் பாகுபாடின்றி அரசாங்க, எதிர்க்கட்சி எம். பி.க்கள், தொழிற்சங்கத் தலைவர்கள், இளைஞர்கள் ஆகியோர் அங்கம் வகிப்பர்.

### யார் சர்வாதிகாரி

பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா என்னைச் சர்வாதிகாரி என்கிறார். 5 ஆண்டுகள் ஆட்சி செலுத்துவதற்கு 70-ம் ஆண்டில்தெரிவுசெய்யப்பட்ட அவரின் அரசு, 7 ஆண்டுகள் ஆட்சிசெய்து மக்களின் ஜனநாயக உரிமைகளை கட்டுப்படுத்தியது; பத்திரிகைகளுக்கு வாய்ப்பூட்டு போட்டது; எதிர்க்கட்சியினரின் குரல்வளைகளை நசுக்கியது. இதிலிருந்து யார் சர்வாதிகாரி என்பது மக்களுக்குத் தெரியும். 40 ஆண்டு அரசியல் அனுபவம் உள்ள எனக்கு மக்களுக்கு என்ன தேவை என்று தெரியும். அதன்படி ஆட்சி நடத்துவோம். (ம-இ)

### "ஈழநாடு" பொதுத்தேர்தல் 77 போட்டி

யாழ்ப்பாணத்தில் புற்றுநோய் சிகிச்சைநிலையம் அமைப்பதற்கான சபைக்கு நிதிதிரட்டி உதவும்முகமாக 'ஈழநாடு' நடாத்தும் பொதுத்தேர்தல் போட்டியின் விபரங்கள் 'ஈழநாடு' ஞாயிறு (12-6-77) வார இதழில் வெளிவரும். பரிசுத் தொகை: (1) 1000 ரூபா, (2) 500 ரூபா, (3) 250 ரூபா. 'ஈழநாடு' பிரதிகளுக்குடன் 'ஈழநாடு' ஏஜண்டுகளிடம் பதிவு செய்துகொள்ளுங்கள்.

### நாடும் நயமும்



மயிலர்: பகலில் ஒரு வேட்பாளருக்காகப் பேசி, இரவில் ஒரு வேட்பாளருக்காக உழைத்து, மறைவில் ஒரு வேட்பாளருக்காக வாக்களிப்பவர் பற்றி உமது கருத்து என்ன வேலர்?

வேலர்: மனம், வாக்கு, காயம்... மூன்றையும் மூன்று பேருக்குப் பங்கிட்டுக் கொடுப்பவர்.

—சுந்தர்

### மணிவாக்கு

ஒழுங்குபட்ட சீவியத்தால் மனிதன் திருப்தியுடையவனுகிருன், இந்த மனத்திருப்தி அவனுக்குத் தேக ஆரோக்கியத்தையும் நீண்டஆயுளையும் கொடுக்கிறது.
--காந்திமகான்

ஈழநாடு
THE EELANAADU

## ரயில் சேவை

ரயில்சேவைகள் வழமைபோல் நடைபெறும் என்ற செய்தி பெரும் ஆறுதலளிப்பதாகும்.

ரயில் சேவைகள் சீர்குலைந்ததால் பொதுமக்களே பெரிதும் பாதிக்கப்பட்டார்கள்.

போக்குவரத்துச் செய்வதில் ஏற்பட்ட கஷ்டங்கள்; தூர இடங்களுக்குப் பஸ்ஸில் பிரயாணம் செய்வதில் பாதுகாப்பின்மையால் ஏற்பட்ட கஷ்டநஷ்டங்கள்.

ரயில்சேவை சீர்குலைவால் மாகாணங்களுக்கு உணவுப் பொருள்கள் விநியோகம் பாதிக்கப்பட்டது.

ஏற்கனவே வாழ்க்கைச் செலவு உயர்விஞல் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் உணவுப்பொருள் விநியோகத்தில் ஏற்பட்ட சீர்குலைவால் மேலும் பாதிக்கப்பட்டனர்.

எரிபொருள் தட்டுப்பாட்டிஞல் ஏற்பட்ட நஷ்டங்கள் கொஞ்சமல்ல.

விசுவமடுவில் இருநூறு ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ள மிளகாய்ச் செடிகள் அழியும் நிலையிலுள்ளதாக வந்துள்ள செய்தி கவலையளிப்பதாகும்.

எரிபொருள் தட்டுப்பாட்டிஞல் இந்தப் பயிர்களுக்கு நீர்ப்பாய்ச்சமுடியாமற் போனதே இந்நிலை ஏற்படுவதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

விசுவமடுவில் மட்டும் இருநூறு ஏக்கரில் மிளகாய்ச் செய்கை பாதிக்கப்பட்டுருக்கிறது.

இன்னும்எத்தனை இடங்களில் எரிபொருள் தட்டுப்பாட்டிஞல் விவசாயச் செய்கை பாதிக்கப்பட்டதோ தெரியவில்லை.

ஆட்சி மன்றம் கலைக்கப்பட்டபின் அடுத்ததேர்தல் முடியும்வரை காபந்து அரசாங்கம்தான் ஆட்சியிலிருக்கும்.

இந்த அரசாங்கம் புதிதாக எந்தக் கோரிக்கையையும் வழங்க முடியாதென்பது வேலை நிறுத்தத்திலும் சட்டப்படி வேலை செய்யும் இயக்கத்திலும் ஈடுபடுவர்களுக்குத் தெரியாததல்ல.

ஆனுலும் தேர்தல் சமயத்தில் இப்படியான இயக்கங்கள் நடைபெறுவது ஏன் என்பதுதான் விளங்கிக் கொள்ள முடியாமலிருக்கிறது,

ரயில் சேவை மட்டும் பாதிக்கப்படவில்லை. கொழும்புத்துறைமுகத்தில் கப்பல்கள் கியூவில் நிற்கின்றன. இலங்கைமத்திய வங்கியில் நிலைமை சீராகவில்லை. ஆஸ்பத்திரிகளிலும் இதே நிலை.

அரசாங்கம் வரும்போது ஊழியர்கள் தங்கள் அதிருப்தியைத் தெரிவிப்பதற்கு அவர்களுக்கு உரிமையிருக்கிறது.

பொது மக்கள்தான் பல வழிகளிலும் பாதிக்கப்படுபவர்கள். அவர்களுடைய நலனிலும் அக்கறைகாட்ட வேண்டிய பொறுப்பும் கடமையும் ஊழியர்களுக்கு இருக்கின்றதென்பதையும் அவர்கள் உணர்ந்து கொள்வது நல்லது.

## இரத்தினக்கற்கள் ஏற்றுமதி: இலங்கை இரண்டாமிடம்

கொழும்பு, வெள்ளி

ஜப்பானுக்கு அதிக இரத்தினக் கற்கள் ஏற்றுமதி நாடுகளில் இலங்கை இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது.

இலங்கையிடம் இருந்து ஜப்பான் இறக்குமதி செய்யும் பொருட்களில் 55 சதவீத மானவை இரத்தினக் கற்களே எனத் தெரிவிக்கப்பட்டது.

இலங்கையிடம் இருந்து ஜப்பான் தும்பு, பாக்கெட்டுகளில் நிரப்பப்பட்ட தேயிலை ஆகியவற்றையும் இறக்குமதி செய்து வருகிறது. (உ)

## "தனிநாடு கோரிக்கை: சி. பா. தமிழர் அச்சத்தை கூட்டணி நீக்கவேண்டும்"

யாழ்ப்பாணம், சனி

"தமிழர் விடுதலைக்கூட்டணியினரின் தனித்தமிழ்நாடு கோரிக்கையால் எமது சமூகத்தில் உள்ள படித்தவர்களும் புத்திசாலிகளும் அச்சம்கொள்கின்றனர். இந்த அச்சத்தைத் தீர்க்க த. வி. கூட்டணி நடவடிக்கை எடுக்கவேண்டும்" என்று மாஜி செனட்டர் திரு. ஜி. நல்லையா வசாவிளான் சனசமூகநிலையத்தில் நடைபெற்ற அமரர் செல்வா அஞ்சலிக் கூட்டத்தில் பேசுகையில் கூறிஞர்.

இக்கூட்டத்தில் அவர் மேலும் பேசுகையில், "முன்னைய காலங்களில் தமிழரசுக் கட்சி சிறுபான்மைத் தமிழரை அடிமைப்படுத்தும் என்று சிறுபான்மைத் தமிழர்கள் அஞ்சினர். நான் அவர்களை சமாதானப்படுத்தி போதிய விளக்கங்கள் கொடுத்தும் அவர்கள் திருப்தியடையாததால் அமரர்கள் செல்வா, வன்னியசிங்கம் ஆகியோரிடம் கூட்டிச் சென்று நிலைமையை விளக்கினேன். 'தீண்டாமை ஒழிக்கப்பட்டாலே தமிழ்ச் சமுதாயம் விடுதலை பெறும்' என்று அவர்கள் எம்மிடம் கூறி எம்மை மகிழ்வுடன் அனுப்பிவைத்தனர்.

"இன்றைய நிலையில் தனித் தமிழ்நாடு வேண்டும் என்று த. வி. கூட்டணியினர் கோருகிறார்கள். இதனையிட்டு எமது சமூகத்தைச் சேர்ந்த படித்தவர்களும் புத்திசாலிகளும் நியாயமான அளவு அச்சம் கொள்கின்றனர்.

"கூட்டணித்தலைமைப்பீடம் இதைத் தட்டிக்கழிக்கும்போல் இருக்கின்றது. எனவே இந்த அச்சத்தையிட்டு கூட்டணியினர் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்" என்றார். (கூ-உ)

## "தேர்தல் தந்திரங்களை நம்ப மக்கள் முட்டாள்களல்ல"

– சி. பொ. மயில்வாகனன்

கைதடி, வெள்ளி

'தனிநாடு கோரிக்கையின் பிதாமகர் சுயாட்சிக் கழகத் தலைவர் நவம்தான். அப்போது அவர் சுயாட்சிக் கோஷம் எழுப்பியபோது சிரித்தவர்கள் எல்லோரும் இன்று தனிநாடு கோருகிறார்கள். இப்போது எங்கும் தனிநாடு என்பதே பேச்சாயிருக்கிறது'

இவ்வாறு சாவகச்சேரித் தொகுதியில் போட்டியிடும் சுயாட்சிக்கழக சார்பில் சுயேச்சையாகப் போட்டியிடும் சட்டத்தரணி திரு. சி. பொ. மயில்வாகனன் கோயிலாக்கண்டியில் நடைபெற்ற கருத்தரங்கில் பேசுகையில் கூறிஞர். இக்கருத்தரங்கு திரு. வே. சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது.

திரு. மயில்வாகனன் மேலும் பேசுகையில் கூறியதாவது;

'கூட்டணியினர் தனிநாடு போராட்டம் நடத்திவருவது உண்மையே. ஆஞல் தனிநாடு ஒன்றுதான் தமிழருக்கு விமோசனம்தரவல்லது என்று முதன்முதல் கோஷம் எழுப்பி சுயாட்சிக் கழகத் தலைவரைக் கூட்டணியினர் சேர்த்துக்கொள்ளத்தவறியது மிக்க கவலைக்குரியது. கடைசிநேரத்திலாவது கழகத்தின் கோரிக்கையைக் கூட்டணி ஏற்று ஒற்றுமை கண்டிருக்கவேண்டும். தனிநாடு கோரிக்கையின் பிதாமகர் சுயாட்சி நவம்தான் என்பதை மக்கள் நன்கு அறிவர். கூட்டணியினர் மட்டுமல்ல, இன்று தேர்தலில் போட்டியிடுபவர்களில் அநேகரும் தனிநாடுதான் தமது இலட்சியம் என்று முழங்குகிருர்கள். இவர்களின் தேர்தல் தந்திரங்களை நம்புவதற்கு மக்கள் முட்டாள்கள் அல்ல' [அ]

## "தமிழர் விடுதலைக் கூட்டணி சிறுபான்மைத் தமிழர் பிரச்னையில் அதிக அக்கறை காட்டுகிறது"

யாழ்ப்பாணம், சனி

'நாங்கள் இதுவரைகாலமும் பலவித பாகுபாடுகளிஞல் இடதுசாரி இயக்கங்களை அதிகளவில் சார்ந்துநின்றேம். ஆஞல் அந்தநிலைமாறி இன்று தமிழர் விடுதலைக் கூட்டணியையே நாம் ஆதரிக்கின்றேம். இதற்குக்காரணம் தமிழர் விடுதலைக்கூட்டணி சாதியைஒழிப்பதற்கு, சிறுபான்மை மக்களின் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு அதிக அக்கறை காட்டுகிறது. உடுப்பிட்டியில் சிறுபான்மை மக்களைப் பிரதிநிதிப்படுத்துவது, தேநீர் கடைப்பிரவேசப், சமபந்திப் போசனம், கலப்புமணங்கள்போன்ற பல பொதுவிஷயங்களை விடுதலைக்கூட்டணி ஊக்கத்துடன் முன்னின்று நடாத்துகிறது'.

இவ்வாறு சமாதான நீதவான் திரு. வி. பொன்னுத்துரை தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஆரியகுளம் தேர்தல் அலுவலகத் திறப்புவிழாவில் பேசுகையில் கூறிஞர். இவ்அலுவலகம் யாழ் தொகுதி வேட்பாளர் சட்டத்தரணி வெற்றிவேலு யோகேஸ்வரஞல் திறந்துவைக்கப்பட்டது. திரு. எஸ். சிவசுப்பிரமணியம் கூட்டத்திற்குத் தலைமைவகித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் 'ஒருவரையும் புறக்கணிக்காது தம்மை நாடியவர்களுக்குத் தம்மாலான உதவியைச் செய்யவேண்டுமென முயற்சி எடுக்கும் சமூகத்தொண்டன் சட்டத்தரணி யோகேஸ்வரன் எனக் கூறிஞர். திரு. என். ரி. செல்லத்துரை பேசுகையில் 'தமிழர் விடுதலைக் கூட்டணி சிறுபான்மை இனத்தின் இன்னல்களை மாற்றத் துடிக்கும் பேரணி' என்றுர்.

அவரை அடுத்துப் பேசிய திரு. சந்திரபோஸ் 'பலதிசைகளில் பிரிந்துநின்று சிறுபான்மைத்தமிழர் தங்கள் பிரச்னைகளைத்தீர்க்க இயலாது. பெரிய இயக்கங்கள்மூலமே அவர்கள் தமது பிரச்னைகளைத் தீர்க்கக் கூடியதாக இருக்கும். தமிழரசு இயக்கமும் – கூட்டணியும் சாதிப் பாகுபாட்டை மாற்ற முயலும் இயக்கங்களாக இயங்குகின்றன. மரவரி முறை அமுலுக்குக் கொண்டுவரப்பட்டபோது முதன்முதலில் அதனை எதிர்த்துப் பேசியவர் பருத்தித்துறை அபேட்சகர் திரு. துரைரத்தினம்தான்' என்றுர்.

திரு. குணசிங்கம் பேசுகையில் 'நாங்களும் தமிழர்தான் என்பதைக்காட்ட தனிப்பட்ட ஆட்களைப்பாராது தரப்பட்ட கொள்கைகளை ஏற்று தமிழர் விடுதலைக்கூட்டணி உறுப்பினர்களுக்கு வாக்களிக்கவேண்டும்' என்றுர்.

முன்னுள் மாநகரசபைஉறுப்பினர் திரு. நீ. அன்ரனிப்பிள்ளை பேசுகையில் 'எக்காலமும் இல்லாத அளவில் பெருந்தொகையான மக்கள் கலந்து கொண்டதைப் பார்க்கையில் தமிழர்விடுதலைக் கூட்டணி அபேட்சகரின் வெற்றி இப்போதே நிச்சயமாகிவிட்டது' என்றுர். சபா செந்தூராசா, அலோசியஸ். யாழ் தொகுதி வேட்பாளர் யோகேஸ்வரன் உட்படப் பலர் இக்கூட்டத்தில் பேசினர். (இ-அ)

## "உரிமை பெறும்வரை மாலை அணிய மாட்டேன்"

யாழ்ப்பாணம், சனி

'இந்நாட்டில் தமிழருக்கு உரிமை வழங்கப்படும்வரை, தமிழன்னையின் பேரால் எனது கழுத்தில் மாலை அணியமாட்டேன்' என கரம்பனில் நடந்த கருத்தரங்கொன்றில் ஐக்கிய தேசியக்கட்சி வேட்பாளர் திரு. ம. அமிர்தலிங்கம் உறுதியளித்தார்.

திரு. கனகசபாபதி தலைமையில் நடைபெற்றஇக்கருத்தரங்கில் திரு. அமிர்தலிங்கம் மேலும் பேசுகையில் தமிழர் விடுதலைக் கூட்டணியினரால் கூறப்படும் 'தென்னிலங்கையில் உள்ள முற்போக்கு சக்திகள்' என்பதில் முதலிடம்வகிக்கும் எம்துகட்சி, ஜனநாயக சோஷலிச அமைப்பில் பெரு நம்பிக்கை கொண்டுள்ளது. அதைத்தழுவியே அதன் தேர்தல் செயல்திட்டமும் வெளியாகியுள்ளது. இச்செயல்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு நான் ஊர்காவற்றுறைத் தொகுதிக்கு ஓர்செயல் திட்டத்தைத் தீட்டியுள்ளேன். அத்திட்டத்தில் முக்கியமாக புங்குடுதீவு நயினுதீவு இணைப்பு; சத்திரசிகிச்சை வசதிகளை உள்ளடக்கிய மத்திய வைத்திய நிலையம்; திறந்த பல்கலைக்கழகம், விவசாய குடிநீர் தேவைகளை அளிக்கக்குழாய்கிணறுகள், தீவுப்பகுதிகட்கு சீரான படகு சேவை: விஞ்ஞான ஆய்வுகூட வசதிகள் அடங்கிய பாடசாலைகள்; ஆயுர்வேத மூலிகை ஆராய்ச்சிநிலையம்; தீவுப்பகுதி மூலவள அபிவிருத்தி அடிப்படையில் தொழிற்சாலைகள், விவசாய கால்நடை அபிவிருத்தித்திட்டங்கள்; மீன்பிடித்துறை அபிவிருத்தி, மீனைக் கெடாது பாதுகாக்க குளிரூட்டும் களஞ்சிய வசதிகள், சந்தைப்படுத்தும் வசதிகள், இளைஞர்நலம் பேணலும், வேலைவாய்ப்பு முயற்சிகளும் ஆகிய பல பணிகளை தங்கள் ஒத்துழைப்புடன் நிறைவேற்ற திடசங்கற்பம்பூண்டுள்ளேன்.' (ஈ)

## 200 ஏக்கரில் கரும்புச் செய்கை

சாய்ந்தமருது, வெள்ளி

அம்பாறை தேர்தல் தொகுதி அபிவிருத்திச்சபை அம்பாறையில் சுமார் 200 ஏக்கரில் கரும்புச்செய்கையை மேற்கொள்ளவிருக்கிறது.

இதன்மூலம் 75 பேருக்கு அதிகமானேருக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இத்திட்டத்துக்கென அரசாங்கம் 4,17,000 ரூபாவை போனஸ்ஒதுக்கியுள்ளது. (உ)

......

### தடுப்பூசி

வேலணை, வெள்ளி

வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குள் இருக்கும் மண்டைதீவு, அல்லைப்பிட்டி முதலிய இடங்களில் இருக்கும் பதினைந்து வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு காசநோய்வராமல் பாதுகாத்துக்கொள்ளும் தடுப்புஊசி மருந்து ஏற்றப்படவுள்ளது.

இதற்கான சகல நடவடிக்கைகளையும் வேலணை சி. என். ஏ. பி. ரி. கிளையினர் செய்துள்ளனர். தற்பொழுது பெயர் பட்டியல் தயாரிக்கப்பட்டு வருகின்றது. (அ)

### வாரத்திற்கு ஐந்து கலன் பெற்றேல்

உடுப்பிட்டி, வெள்ளி

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் பொதுத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு விசேட சலுகை ஒன்றை வழங்க முன்வந்துள்ளார்.

இவ்வேட்பாளர்களுக்கு அவர்களின் தேர்தல் தேவைக்காக ஒரு கிழமைக்கு ஐந்து கலன் பெற்றேல் வீதம் வழங்க அவர் முடிவு செய்துள்ளார். இவர்கள் தமக்குரிய பெற்றேல் பெர்மிட்டை அந்தந்தப்பகுதிப் பிரிவு உதவி அரசாங்க அதிபர்களிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டது. (உ)

# “வடக்கு-தெற்கு என்ற பாகுபாடு மத்திய அரசிற்குக் கிடையாது”

## சென்னையில் ஜனதா தலைவர் உரை

### சோஷலிஸ சமுதாயம் அமைப்பதே இறுதி இலட்சியம் என்கிறார்

சென்னை, ஜூன் 10

வட இந்தியா தென்னிந்தியா என்ற பாகுபாட்டை ஜனதா கட்சி அடிப்படையாகக் கொண்டு செயற்பட்டதும் இல்லை. செயற்படப்போவதுமில்லை' என்று ஜனதா கட்சித் தலைவர் திரு. சந்திரசேகர் கூறினார்.

சென்னையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக்கூட்டம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தமது உரையில் மேலும்கூறியதாவது: 'ஜனதா கட்சியின் பொருளாதாரத்திட்டம் என்ன என்று எதிர்க்கட்சியினர் கேட்கிறார்கள். ஒரு சோஷலிஸ சமுதாயத்தை அமைப்பதுதான் ஜனதாவின் இறுதியான இலட்சியம் என்பதை தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

**ஆதிக்க உணர்வு கிடையாது**

ஜனதா அரசு வட இந்தியா என்ற ஆதிக்க உணர்வுடன் செயற்படுகிறது என்ற முன்னாள் மத்திய நிதியமைச்சர் திரு. சி. சுப்பிரமணியத்தின் குற்றச்சாட்டை நான் மறுக்கிறேன். வட இந்தியா தென்னிந்தியா என்ற பாகுபாடு எம்மிடம் அறவே கிடையாது.

ஜனதா அரசு பதவியேற்று இரு மாதங்களாகியும் சாதித்தது என்ன என்று காங்கிரஸ் தலைவர் பிரமானந்தரெட்டியும், முன்னாள் அமைச்சர் சவானும்கேட்கிறார்கள். பத்திரிகை சுதந்திரம் அளித்தோம், அரசியல் காரணத்துக்காக எவரும் கைதுசெய்யப்படுவதை தடுத்தோம், மக்கள் அச்சமின்றி வாழ வழிசெய்தோம், அரசு இயந்திரங்கள் தேர்தலுக்குப் பயன்படுத்தப்படமாட்டாது என உறுதியளித்தோம் அதனை செயலில் காட்டினோம் குறுகிய காலத்தில் நாம் புரிந்த சேவை இது. தமிழ்நாட்டு மக்கள் சமுதாய மறுமலர்ச்சிகாண ஜனதா அரசை வலுப்படுத்த வேண்டும்.

**ஆச்சார்ய கிருபளானி**

தியாகராய நகரில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் ஆச்சார்ய கிருபளானி பேசுகையில், 'தமிழ் நாடு பாரதத்தின் ஒரு பகுதி எனவே தனித்துநின்று வளர்ச்சியைக் குன்றச் செய்யாது ஜனதா கட்சிக்கு பேராதரவு அளித்து வெற்றிபெறச்செய்ய வேண்டியது அவசியம்என்றார். (உ)

## நடவடிக்கை

லண்டன், ஜூன் 10

ஸாம்பிய தேசிய விடுதலைப் படைகள் ரொடீஷியா மீதான யுத்தநிலையைத் தீவிரப்படுத்தும் என்று ஸாம்பிய ஜனாதிபதி கலாநிதி கெனத் கொண்டா கூறியுள்ளார்.

## சஞ்சய், மாஜி அமைச்சர் மீது வழக்கு!

புதுடில்லி, ஜூன் 10

மதுபர்மிட் வழங்குவது தொடர்பான ஒரு தகராறையடுத்து சிலரை 'மிசா' சட்டத்தின்கீழ் சிறையில் வைத்ததாக முன்னாள் உத்தரப் பிரதேச முதலமைச்சர், திரு. சஞ்சய் காந்தி உட்பட மூவருக்கு எதிராக வழக்குத் தாக்கல்செய்யப்பட்டுள்ளது.

இந்நடவடிக்கைக்கு முன்னாள் உத்தரப்பிரதேஷ முதலமைச்சரை திரு. சஞ்சய் காந்தி தூண்டியதாகக் கூறப்படுகிறது. [உ]

## துருக்கியதூதர் சுட்டுக்கொலை

லண்டன், ஜூன் 10

வத்திக்கானில் பதவிவகித்த துருக்கிய தூதர் ரோமாபுரியில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தார் என அறிவிக்கப்பட்டது. [உ]

பாக். அரசியல் நெருக்கடி:

## அரசு-எதிர்க்கட்சி

### பேச்சுவார்த்தையில் முட்டுக்கட்டை

இஸ்லாமாபாத், ஜூன் 10

பாகிஸ்தானில் நிலவும் அரசியல் நெருக்கடி தொடர்பாக பாகிஸ்தான் அரசாங்கத்திற்கும், ஒன்பது கட்சிகள் அடங்கிய எதிர்க்கட்சிக் கூட்டணிக்கும் இடையேயான சமரசப் பேச்சுவார்த்தைகளில் தேக்கநிலை காணப்படுவதாக ராவல்பிண்டி செய்திகள் தெரிவிக்கின்றன. பொதுத்தேர்தல் மீண்டும்நடத்தப்படவேண்டும் என்பதை அடிப்படையாக வைத்தே இப்பேச்சுவார்த்தைகள் நடைபெறுகின்றன.

நாலாவது சுற்றுப் பேச்சுவார்த்தைகளின்போது முட்டுக்கட்டைநிலை தோன்றியுள்ளபோதிலும் சமரச தீர்வுகாண முடியும் என்று இருதரப்பினரும் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். [உ]

## கல்வி புகட்ட நடவடிக்கை

சென்னை, ஜூன் 10

தமிழ்நாட்டில் ஆண்டு ஒன்றிற்கு இரண்டு லட்சம் பேருக்கு கல்வி அறிவை உண்டாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதம கல்வி அதிகாரி டாக்டர் லாரன்ஸ் உதகமண்டலத்தில் நடைபெற்ற பெற்றோர் ஆசிரியர் மாநாடு ஒன்றில் பேசுகையில் கூறினார்.

இஷ்ட பூர்வ கல்வித்திட்டத்தின் கீழ் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அவர் குறிப்பிட்டார். (உ)

லண்டன் மாநாடு:

## கறுப்பர் பிரச்னை தீர்ப்பதில் வெள்ளையர் அரசு காலங்கடத்துகிறது”

### ஸாம்பிய அதிபர் குற்றச்சாட்டு

லண்டன், ஜூன் 10

ரொடீஷியாவில் உள்ள கறுப்பு இன கொரிலாக்களுக்கும் தென்னாபிரிக்காவில் உள்ள புறக்கணிக்கப்பட்ட பகுதிகளுக்கும் கூடிய உதவியளிக்க வேண்டும் என்று ஸாம்பியா ஜனாதிபதி கலாநிதி கெனத் கௌண்டா லண்டனில் நடைபெற்றுவரும் பொதுநல நாடுகளின் உச்சி மாநாட்டில் பேசும்போது வேண்டுகோள் விடுத்தார்.

வெள்ளையர் அரசுகள் கறுப்பர் இனப் பிரச்னைகளைத் தீர்த்துவைப்பதில் வேண்டும் என்றே காலங்கடத்திவருகின்றன என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

**பிரி. பிரதமர் பேச்சு**

இம்மகாநாட்டில் பிரிட்டிஷ் பிரதமர் திரு. கலகன் பேசுகையில், 'கொரிலாக்களின்' நிலை எனக்குப் புரிகிறது. இவ்விவகாரத்தில் சமரச முயற்சி பலனளிக்கும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு' என்றார்.

இதேவேளை, லண்டன் மாநாட்டில் கலந்துகொள்ளும் பாரதப்பிரதமர் திரு. மொரார்ஜிதேசாய் பங்களாதேஷ் ஜனாதிபதி ரஹ்மானை மீண்டும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர். இரு நாடுகளுக்கும் இடையேயான நட்புறவுபற்றி ஆராயப்பட்டது. (உ)

## இடி அமீன் கம்பாலா திரும்பினார்: உகண்டா வானொலி அறிவிப்பு!

### புரட்சிவாதிகளை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினாராம்

கம்பாலா, ஜூன் 10

உகண்டா ஜனாதிபதி திரு. இடி அமீன் கம்பாலா திரும்பிவிட்டார் என்று உகண்டா வானொலி அறிவித்தது.

திரு. இடி அமீன் கம்பாலாவில் இருந்து புறப்பட்டு தான்ஸானியா ஸாம்பியா ஆகிய நாடுகளுக்குச் சென்று உயர் புரட்சிவாத தலைவர்களை சந்தித்து பேச்சுவார்த்தைகள் நடத்தி விட்டுத் திரும்பியுள்ளதாக உகண்டா வானொலி மேலும் தெரிவித்தது.

லண்டனில் நடைபெறும் பொதுநல நாடுகளின் உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்கு கம்பாலாவில் இருந்து திரு. இடிஅமின் விமானமூலம் புறப்பட்டுச் சென்றார் என முன்னர் அறிவித்த உகண்டா வானொலி அவர் லண்டன் மாநாட்டில் கலந்து கொள்ளாது திரும்பியது ஏன் என்ற விபரத்தை வெளியிடவில்லை.

**பிரிட்டிஷ் பிரஜை கைது**

இதே நேரம் உகண்டாவில் உளவு பார்த்ததாகக் கூறப்படும் பிரிட்டிஷ் பிரஜை ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்றும் இவர் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்படும் பட்சத்தில் இவர் சுட்டுக்கொல்லப்படுவார் என்றும் உகண்டா அறிக்கைகள் தெரிவிக்கின்றன. (உ)

## “வளர்முகநாடுகளுக்கு உணவுதவி அதிகரிக்கப்படவேண்டும்”

### லண்டன் மாநாட்டில் வலியுறுத்து

லண்டன், ஜூன் 10

லண்டனில் நேற்று ஆரம்பமான பொதுநல நாடுகளின் உச்சிமாநாட்டில் வறுமையை ஒழிப்பது பற்றியும், தென்னாபிரிக்கப் பிரச்னை பற்றியும் ஆராயப்பட்டது.

இம் மாநாட்டில் சிங்கப்பூர் பிரதமர் திரு. லீகுவான்யூ பேசுகையில், “கைத்தொழில் நாடுகள் தம் ஆதிக்க உணர்வைக் குறைத்துக்கொள்ள வேண்டும்” என்று கோரிக்கை விடுத்தார்.

30 நாடுகளின் தலைவர்கள் இம்மாநாட்டில் கலந்துகொள்கின்றனர்.

வளர்முக நாடுகளுக்கான உணவுதவி அதிகரிக்கப்பட வேண்டும் என்று இம்மாநாட்டில் வலியுறுத்தப்பட்டது

**பாரதப் பிரதமர்**

இம் மாநாட்டில் கலந்துகொள்ள பாரதப் பிரதமர் திரு. மொரார்ஜிதேசாய் பொதுநல நாடுகளின் தலைவர்கள் பலரையும் சந்தித்து உரையாடினார்

திரு. தேசாய் சிங்கப்பூர், மலேஷியா, ஜமேக்கா பிரதமர்களுக்கு பகல் விருந்துபசாரம் ஒன்றினை அளித்தார்.

பிராந்தியஒற்றுமை குறித்து திரு. தேசாய் அவ்வேளை வலியுறுத்தினார். (உ)


உங்கள் விவசாய பயிர்களை பாதுகாத்து நீங்கிழைக்கும் பூச்சி பொடுக்களை இல்லாதொழிப்பது......



# பக்ஸ்

அல்லும் பகலும் அயராதுழைத்து நீங்கள் உண்டு பண்ணிய விவசாயப் பயிர்களிலிருந்து மேலான சிறந்த பயன்பெற அழிவுண்டாக்கும் பூச்சி புழுக்களிலிருந்து அவற்றைப் பாதுகாருங்கள்.

மிளகாய்ச் செடிச் சுருள், அவரை, ஈரவெங்காயம், புகையிலை, காய்கறி, அன்னுசி முதலியவற்றிலிருந்து சிறந்த வருவாயைப் பெற பாவியுங்கள். சர்வதேச புகழ்பெற்ற — பக்ஸ்

சர்வதேச செல்ரேன் கம்பெனியின் இரசாயனத் தயாரிப்பு 'பக்ஸ் 300'
உற்பத்தியாளர்: 'மொனிடர் 600';
ஹரிசன்ஸ் அன்ட் குரொஸ்பீல்ட் (கொழும்பு)
டார்லி ரோட், கொழும்பு —10.

# "ஐ.தே.கட்சி பிரச்சாரத்துக்கு மக்கள் ஏமாறமாட்டார்கள்"

வென்னப்புவ, வெள்ளி

'ஐக்கிய தேசிய கட்சியின் பொதுத் தேர்தல் பிரசாரத்தில் மக்கள் மயங்கிவிடமாட்டார்கள். பிரச்சாரத்தை எப்படி நடத்தினாலும், பண்டாரநாயக்கா பெயரையும் அவரின் கொள்கைகளையும் மக்களிடமிருந்து பிரித்துவிடமுடியாது' என்று இங்கு நடைபெற்ற ஸ்ரீ. ல. சு. கட்சி தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் வென்னப்புவ தொகுதி வேட்பாளர் திரு. அகஸ்தீன் பொன்சேகர் பேசுகையில் கூறினார்.

'தப்பித்தவறி ஐக்கியதேசிய கட்சி ஆட்சிக்கு வந்தால், இந்த நாடு மீண்டும் முதலாளித்துவ வாதிகளின் கரங்களில் சிக்கி விடும்' என்று கூறிய திரு. அகஸ்தீன் மேலும் கூறியதாவது:

'ஐக்கிய தேசியகட்சி ஆட்சிக்கு வந்தால், இந்த நாட்டுச் சாதாரண மக்களின் அத்தியாயம் முடிந்துவிடும். இப்படியான பயங்கர நிலை இங்கு ஏற்படாமலிருக்க, எதிர்வரும் தேர்தலில் மக்கள் அனைவரும் ஒருங்கிணைந்து ஐக்கிய தேசிய கட்சியை மீண்டும் வீழ்த்த வேண்டும்.

'நான் ஒரு மீனவரின் மகன் என்று கூறிக்கொள்வதில் பெருமை அடைகின்றேன். என்னை வளர்த்து ஆளாக்குவதில் என்தந்தை கடும் முயற்சி எடுத்தார்' அந்த முயற்சிகள் வீண்போகவில்லை. நான் மீன்பிடி உதவி அமைச்சரானேன். இந்த நாட்டு மீனவர்களின் கஷ்டங்களைப் போக்குவதில் தீவிரமாகப் பாடுபட்டேன். மீன்பிடித்துறை அபிவிருத்திக்கும், மீனவர்களின் கஷ்டங்களைப் போக்கவும் ஒரு தனி அமைச்சு நிறுவிய பெருமை காலஞ் சென்ற எஸ். டபிள்யு. ஆர். டி.பண்டாரநாயக்காவையே சாரும்.

ஐக்கிய தேசிய கட்சி ஏழைகளுக்கு ஒரு போதும் உதவியது கிடையாது. முதலாளிகளுக்கே மேலும் உதவிகளை வழங்கியது. ஆனால் இப்பொழுது, ஏழை மக்கள் பற்றியும் சோஷலிஸம் பற்றியும் ஏதேதோ ஐ. தே. கட்சியினர் கூறுகின்றார்கள். ஆட்சிக்கு வந்தால் ஏழை மக்களின் கண்ணீரைத் துடைப்பதாக முதலைக் கண்ணீர் வடிக்கின்றனர். ஐ. தே. கட்சியின் சுயரூபத்தை மக்கள் உணரவேண்டும். கடந்த ஏழு ஆண்டுகளில் இந்த நாட்டு மக்களுக்கு எத்தன்மையான நன்மைகளை ஸ்ரீ. ல. சு. கட்சி செய்திருக்கிறது என்பது மக்களுக்குத் தெரியும். மீண்டும் ஸ்ரீ ல சு கட்சி ஆட்சியையே மக்கள் தெரிவு செய்வார்கள். இதில் சந்தேகமே இல்லை' என்று திரு. அகஸ்தீன் கூறினார்.

## "ஐ. தே. கட்சி ஆட்சிக்கு வந்தால் 10 லட்சம்பேருக்கு வேலை!"

எல்பிட்டிய, வெள்ளி

"ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சிக்கு வந்ததும் உடனடியாக பத்துலட்சம் பேருக்கு வேலை வழங்கப்படும். இதற்கான திட்டங்கள் ஏற்கனவேவரையப்பட்டுள்ளன" என்று பிடிகல என்னுமிடத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் ஐ. தே. கட்சியின் உபதலைவர் திரு. ஆர். பிரேமதாசா பேசுகையில் உறுதியளித்தார்.

"ஐக்கிய தேசிய கட்சி ஆட்சிக்கு வந்தால் உடனடியாக என்னென்ன திட்டங்கள் மேற்கொள்ளப்படும் என்று விளக்கிய திரு. ஆர். பிரேமதாச, நாட்டிலுள்ள ஒவ்வொரு கிராமத்துக்கும் மின் சார விநியோகம் செய்வது முதல் நடவடிக்கையாக இருக்கும் என்று தெரிவித்தார்.

"கைத்தொழில் திட்டங்களை நகரப்புறங்களில் ஆரம்பிக்காமல், கிராமப்புறங்களில் தான் ஆரம்பிப்போம். இதன் மூலம்கிராம மக்களின் வேலை இல்லாத்திண்டாட்டம்தீருவதுடன், வேலைதேடி நகரப்புறங்களுக்குப் படையெடுக்கும் ஆசையும் குறையும்.

"காலஞ்சென்ற டட்லி சேனநாயக்கா, வறுமையை எதிர்த்து போர் தொடுத்தார். ஆனால் மக்களை எதிர்த்து அவர் யுத்தம் செய்யவில்லை. இந்த நாட்டின் அடுத்த பிரதமர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனஎன்பதில் எனக்கு எள்ளளவும் சந்தேகம் இல்லை. தற்போதைய சமூகக் கட்டுக் கோப்புஅடிமைத்தனத்திலும் மோசமானது இதுமாற்றி அமைக்கப்பட்டு, மக்கள் சுதந்திரப் பிரஜைகளாக்வாழும் வகையில் புதிய சட்ட திட்டங்கள் அறிமுகப்படுத்தப்படும்" என்று திரு. ஆர். பிரேமதாசா கூறினார்.

## "தேர்தலில் போட்டியிடும் நிர்ப்பந்தத்திற்கு நான் தள்ளப்பட்டேன்"

— வி. குமாரசுவாமி

யாழ்ப்பாணம், சனி

"தமிழர் ஒற்றுமையைக் கருதி இம்முறை நான் தேர்தலில் போட்டியிடுவதில்லையெனத் தீர்மானித்திருந்தேன். ஆனால் கூட்டணி நியமனக் குழுவினர் சில தொகுதிகள் பற்றி எடுத்த முடிவு தமிழர் ஒற்றுமையைப் பாதிப்பதாக அமைந்தது. இதனாலேயேதான் தேர்தலில் போட்டியிடவேண்டிய நிர்ப்பந்தத்திற்குத் தள்ளப்பட்டேன்."

கைதடியில் நடந்த தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் பேசிய ஜி. ஜி. காங்கிரஸ் அபேட்சகர் திரு. வி. குமாரசுவாமி மேற்கண்டவாறு கூறினார்.

திரு. கதிரேசு தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் திரு. வி. குமாரசுவாமி மேலும் கூறியதாவது: மூன்று வருட காலத்திற்குள், பொருளாதார ரீதியில் முன்னேறி தமிழ்ஈழத்தை நிறுவுவோம்.

"கடந்த தேர்தலில் மகாவலி கங்கையை வடக்கே திருப்புவேன் என்று கூறியபோது சிலர் கேலிசெய்து போத்தலில் தான் கொண்டுவரலாம் என்றனர். இன்று மகாவலி வடக்கு நோக்கி வந்துகொண்டிருக்கிறது.

"கூட்டணியிர் சரி அல்லது வேறு எந்த இயக்கத்தினரும் சரி திட்டமிட்டு, உண்மையாக தமிழ் ஈழப்போராட்டத்தை ஆரம்பித்தால் அதில் பங்குபற்ற தயாராக இருக்கின்றேன்." (க)

## இவ்வருடமும் பரீட்சை நடக்கும்

உடுப்பிட்டி, வெள்ளி

யாழ்.மாவட்டத்தில்சென்ற வருடத்தைப் போன்றுஇவ்வருடமும் தேசியபொதுக்கல்வித் தராதரப்பத்திர கவின்கலைக் கல்வி (சங்கீதம், நடனம்) செய்கைமுறைப் பரீட்சையை நடாத்துவது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

வடமாநிலக் கல்வியதிபதி திரு. க. சிவநாதன் இக்கல்விச்செய்கை முறைப்பரீட்சையை நடாத்துவதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்தார்.

இப்பரீட்சை சம்பந்தமான ஆலோசனைக்கூட்டம்கல்வியதிகாரி திரு. க. சிவசுப்பிரமணியம் தலைமையில் யாழ். இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. இவ்வாலோசனைக் கூட்டத்தில் சங்கீத வட்டாரக் கல்வியதிகாரி திரு. எஸ். கணபதிப்பிள்ளை, யாழ். மாவட்டப் பாடசாலைகளின் கவின்கலைக்கல்வி ஆசிரியர்களும் பங்கு பற்றினர். இச்செய்கைமுறைப்பரீட்சை வட்டாரமட்டத்தில் நடைபெறுமென்றும், ஜுலை மாதம் 1ம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவேண்டுமென்றும் அறிவிக்கப்பட்டது.

......

## வேலையற்ற வாலிபர் செய்த வேலை!

கொழும்பு, வெள்ளி

கொழும்பு நகரில் நாளொன்றுக்கு சராசரி 10 முதல் 12 களவுகள் வரை நடைபெறுவதாக கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவு பொலிசார் தெரிவித்தனர்.

இவற்றில் பெரும்பாலும் வழிப்பறிகள் என்று தெரியவந்துள்ளது.

இவை சனியிடங்களிலும் இருள் சூழ்ந்த இடங்களிலும் நடைபெறுவதாகக் கூறப்பட்டது.

வேலையற்ற வாலிபர்கள் மின்விளக்குகளை பழுதடையச் செய்துவிட்டு இத்திருட்டுக்களை நடத்துவதால் பொதுமக்களை எச்சரிக்கையுடன் இருக்குமாறு பொலிசார் எச்சரிக்கின்றனர். ...... (உ)

## 'புதிய மேயர்

நுவரெலியா, வெள்ளி

நுவரெலியாவின் புதிய மேயராக திரு. யு ஜி. டேவிட் அப்புஹாமி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

நுவரெலியா மாநகரசபையின் கூட்டத்தில் இவர் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

"நாட்டின் பிரச்னைகளை

# ஐ. இ. முன்னணி மட்டுமே தீர்த்து வைக்கும்"

கட்டுகம்பளை, வெள்ளி

"ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினாலோ அல்லது ஐக்கிய தேசியக் கட்சியினாலோ இந்த நாட்டின் பிரச்னைகளைத் தீர்க்கமுடியாது. உண்மையான சோஷலிசத் திட்டங்களைக் கொண்டுள்ள ஐக்கிய இடதுசாரி முன்னணியினால் மட்டும் தான் நாட்டின் பிரச்னைகளைத் திர்க்கமுடியும்." என்று இங்கு நடைபெற்ற தேர்தல் கூட்டத்தில் மக்கள் ஜனநாயகக் கட்சித் தலைவர் திரு டி.பி சுபசிங்கா பேசுகையில் கூறினார்.

"1947-ம் ஆண்டு முதல் கடந்த முப்பது வருடகாலத்தில் ஐக்கிய தேசிய கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் மாறி மாறி இந்த நாட்டை ஆண்டு வந்திருக்கின்றன. ஆனால் இந்த நாட்டு மக்களின் அடிப்படைப் பிரச்னைகளைத் தீர்த்துவைக்க அவை தவறி விட்டன. அபிவிருத்தித் துறையில் ஒவ்வொரு அரசாங்கமும் ஏதோ செய்திருக்கிறது என்றாலும், பிரச்னைகளைத் தீர்த்துவைக்க அவைகளால் முடியவில்லை. ஒரே நேரத்தில் முதலாளித்துவத்துக்கும் ஏழை மக்களுக்கும் சேவையாற்ற முடியாது. முதலாளிகளைப் பொறுத்தவரை இக்கட்சிகள் திருப்திப்படுத்தி விட்டன.

"ஆனால் இவர்களைப் பதவிக்குக் கொண்டுவந்த ஏழை மக்கள் புறக்கணிக்கப்பட்டு விட்டனர். 1970-ல் நாங்களும் அரசில் இருந்தோம். ஒரு பொதுவான சோஷலிசத் திட்டத்தின் கீழ் நாங்கள் இணைந்தோம். இத்திட்டங்கள் சரியான முறையில்அமுல் செய்யப்பட்டிருந்தால், சில முக்கிய பிரச்னைகள் தீர்ந்திருக்கும் என்று விளக்கிய திரு.டி.பி. சுபசிங்க மேலும் கூறியதாவது:

"1975-ல் முதலாளித்துவ எதிர்ப்பு பட்ஜட் கொண்டு வரப்பட்டபோது, அரசாங்கத்திலிருந்து லங்காசமசமாஜக் கட்சி வெளியேற்றப்பட்டது. பதவி யேற்ற புதிய நிதியமைச்சர், பட்ஜட்டின் திட்டங்களை வாபஸ்பெற்றார் இதுமட்டுமின்றி, வெளி நாட்டவர்களின் மூலதனத்துக்கும் உதவிகளை திறந்து வைத்தார்.

நிலைமை இப்படியான போதிலும் அரசாங்கத்திலுள்ள முற்போக்குச்சக்திகள் கடுமையாக எதிர்த்தன. எதை எதையோ பற்றி இரு கட்சிகளும் கூறினாலும் இவைகளிடம் சோஷலிஷக் கொள்கை எதுவுமே கிடையாது. ஐக்கிய இடதுசாரி முன்னணியினால் மட்டுமே இந்த நாட்டு மக்களுக்கு விடுதலை தேடிக்கொடுக்கலாம் என்றும் திரு.சுபசிங்கா கூறினார்.

கள்ளக்கடத்தல்:

# இலங்கை-இந்திய அதிகாரிகள் சந்திப்பு

கொழும்பு, வெள்ளி

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே நடைபெறும் கள்ளக்கடத்தல்களை முறியடிப்பது தொடர்பான இருதரப்பு அதிகாரிகளும் கொழும்பில் பேச்சுவார்த்தை நடத்தினர்.

கடந்த 1975—76ம் ஆண்டுகளிலும் பார்க்க இவ்வாண்டு இரு நாடுகளுக்கும் இடையில் கடத்தல்கள் மிகக் குறைந்த அளவிலேயே நடைபெற்றுள்ளன என்று இப்பேச்சுவார்த்தைகளின்போது தெரிவிக்கப்பட்டது.

இரு நாடுகளுக்கும் இடையில் தகவல் பரிமாற்றம் விரிவடைய வேண்டுமென்றும் கடத்தல் தொடர்பாக மாதாந்த அறிக்கைகள் பரிமாற்றம் செய்யவேண்டும் என்றும் பேச்சுவார்த்தைகளில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

கடத்தலில் ஈடுபடுபவர்களின் பெயர்கள் அடங்கிய அட்டவணையும் இருதரப்பு அதிகாரிகளிடமும் இருக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ)

## கிணற்றில் மூழ்கி மரணம்

யாழ்ப்பாணம், சனி

உத்தியோகத்திற்காக வெளியில் செல்லும் பெண்ணொருவரின் கைக்குழந்தையைப் பார்ப்பதற்காக வேலைக்கமர்த்தப்பட்ட 13 வயது மலைநாட்டு சிறுவன் கிணற்றில் மூழ்கி மரணமானான்.

யாழ்ப்பாணத்திலுள்ள திருமதி நமசிவாயம் வீட்டில் வேலைபார்த்துவந்த மலைநாட்டு சிறுவனான ஐயனார் கதிரவேலுவின் மரண விசாரணையில்மேற்கண்ட விபரம் தெரியவந்தது.

யாழ். மரண விசாரணை அதிகாரி சட்டத்தரணி எஸ். எஸ். பிரான்சிஸ் மரணவிசாரணை நடத்தினார்.

சம்பவதினம் இரவு வீட்டுச் சொந்தக்காரியான ஆசிரியையும், அவரது தாயாரும் சமையலை முடித்தபின் வேலைக்கார சிறுவனைக் காணாது, பல இடங்களில் தேடிப்பார்த்ததாகவும், கடைசியில் கிணற்றில் சடலத்தைக் கண்டதாகவும் விசாரணையில் கூறப்பட்டது. உடனடியாகப் பொலிசாருக்கு அறிவிக்கப்பட்டு நள்ளிரவு 12 மணிக்கு மரண விசாரணை அதிகாரி திரு. பிரான்சிஸ் சம்பவம் நடந்த இடத்திற்கு நேரில் சென்று பார்வையிட்டார்.

சிறுவனின்சடலத்தை யாழ். ஆஸ்பத்திரி சவச்சாலைக்குக் கொண்டு செல்லுமாறும், பிரேதபரிசோதனை நடத்துமாறும் உத்தரவிடப்பட்டது. சிறுவன் பெற்றோர்களுக்கு அறிவிக்கப்பட்டு விசாரணை பின்போடப்பட்டது. (க)

## பெண் குத்திக்கொலை: ஆசிரியர் தலைமறைவு

கொழும்பு, வெள்ளி

வீரகெட்டியாவைச் சேர்ந்த ஹென்ஹாமி என்ற 45வயதுப் பெண் கத்தியால்குத்திக்கொலை செய்யப்பட்டார்.

இக்கொலைக்குக் காணித்தகராறே காரணமெனக் கூறப்படுகிறது.

இக்கொலை தொடர்பாக பொடிமாத்தையா என்பவரையும் ஆசிரியர் ஒருவரையும் பொலிசார் தேடிவருகின்றனர். (உ)

......

## வடமராட்சியில் மாமரநோய்

உடுப்பிட்டி, வெள்ளி

கரவெட்டிப்பகுதியில் உள்ள மாமரங்களில் புதுவிதமான நோய் பீடித்துவருவதால் மாம்பழ உற்பத்தி வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதி மாமரங்களில் உள்ள மாங்காய்கள் முற்றும் பருவத்தில் அழுகி விழுந்துவிடுகின்றன. இதனால் மாமரச் சொந்தக்காரர்கள் 'இலவு காத்த கிளி' போல் மாம்பழம் கிடைக்கும் எனக் காத்திருந்து அழுகிய மாங்காய்களையே பெற முடிகின்றது. (அ)

நாகம்மாஸ்
(சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
விஜயகுமார்-சுஜாதா
அவள்
ஒரு தொடர்கதை

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 2-30, 6-30, 9-30
சனி, ஞாயிறு 10-30
முத்துராமன் – சுஜாதா
வாழ்ந்து
காட்டுகிறேன்

RIO (Jaffna) Daily 10-30, 4-45, 7-15&9-45 P.m
Caravan to Vaccares
(கரவான் டு வக்கரீஸ்)
(Scope-Color)

வின்ஸர்
(யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
சிவாஜி கணேசன், உஷா நந்தினி,
(இருவேடங்களில்) சௌகார் ஜானகி
மனிதனும்
தெய்வமாகலாம்
(ஈஸ்ட்மன் கலர்)

ராஜா 6-வது வாரம்
(யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
போன்: 7180
தேவரின்
திருவருள்
(ஈஸ்ட்மன் கலர்)
குறிப்பு:- பாடசாலை மாணவர்களுக்கு விசேட ஆசனங்கள் ஒதுக்கிக் கொடுக்கப்படும். நிர்வாகத்துடன் முன்கூட்டியே ஒழுங்கு செய்து கொள்ளலாம்.

ராணி எம். ஜி. ஆர். — லதா
(யாழ்ப்பாணம்) (இருவேடங்கள்) நடித்த
தினசரி 4 காட்சிகள்
நாளை நமதே
(ஈஸ்ட்மன் கலர்)

REGAL Daily: 10-30 a. m, 2-30, 4-45
(JAFFNA) 7-00 & 9-30 p. m.
OMAR SHARIF JULIE ANDREWS
in
THE TAMARIND SEED
(Color)

அனேகரின் வேண்டுகோளுக்கிணங்க நீடிக்கப்பட்டுள்ளது
மனோகரா எம்.ஜி.ஆர் - ராதாசலூஜா
வீரப்பா - நிர்மலா
(யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள் நடித்த
இதயக்கனி
(ஈஸ்ட்மன்கலர்)

சாந்தி யாழ். நகர் தினசரி 4 காட்சிகள்
போன்: 7642
10-30, 2-30, 6-30, 9-45
முத்துராமன் ° சௌகார் ° மேஜர்
° பாலையா ° நாகேஷ்
நடித்த
கே. பாலசந்தரின்
பாமா விஜயம்
(புதிய பிரதி)

வெலிங்டன் ரஞ்சன்
[யாழ். நகர்] நடித்த
தினசரி 3, சனி ஞாயிறு 4 காட்சிகள்
நீலமலைத்திருடன்

லிடோ போன்: 7693 தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
(யாழ்.நகர்) சிவாஜி — சாவித்திரி
நடித்த
வடிவுக்கு வளைகாப்பு

# கேள்வி விளம்பரம்

சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் தரம் பிரிக்கப்பட்ட வெற்றுச்சாக்குகள் 16,000 கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்காக வைக்கப்பெற்றுள்ளன. சங்கத்தில் வைப்புப்பணமாக ரூபா 250/- செலுத்தி கேள்விப்பத்திரம் பெற்று விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பம் பதிவுத்தபால் மூலம் இடதுபக்க மூலையில் ''வெற்றுச்சாக்குகள் கேள்வி'' என்று எழுதப்பட்டு 18-6-77-ந் திகதிக்கு முன்பு சங்க பொது முகாமையாளருக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும்.

வி. கந்தசாமி,
பொதுமுகாமையாளர்.
6417

## சாரத்தையும் இழந்து ஓட்டம் பிடித்தார்

உடுப்பிட்டி, வெள்ளி

கல்லூரியில் இரவில் புகுந்து திருட முயன்ற வாலிபனொருவன், தான் அணிந்து இருந்த சாரத்தையும் பறிகொடுத்து விட்டு நிர்வாணமாக ஒடித் தப்பிய சம்பவம் கரவெட்டி திருஇருதயக் கல்லூரியில் நிகழ்ந்துள்ளது.

பிரஸ்தாப வாலிபன் கல்லூரி அறைக்குள் புகுந்து திருட முயல்கையில் கல்லூரியின் இரவுக் காவலாளி இதனைக் கண்டு திருடனைப்பிடிக்க முயன்று அவரது சாரத்தைப் பிடித்து இழுக்கவே, திருட்டு வாலிபன் சாரத்தையும் போட்டுவிட்டு நிர்வாணமாகவே ஓடித் தப்பினாராம் கல்லூரிக் காவலாளி திருடனின் சாரத்துடனேயே திரும்ப நேரிட்டது.

வெஸ்லி
[மானிப்பாய்]
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
A. V. M. ராஜன் – லக்ஷ்மி
அகத்தியர்

# வரி விளம்பரம்

## தேவை

காஸ் வெல்டிங், கம்மாலை வேலை, லேத் வேலை தெரிந்தவர்களும் மேற்பார்வையாளர்களும் தேவை. எழுதிய விண்ணப்பத்துடன் நேரில் வரவும். ராதா மெஷின் கொம்பனி, 95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 6421

வயதான ஒருவருக்கு வீட்டிலிருந்தே உதவி செய்யக்கூடிய கையாள் தேவை. வயது நாற்பதிற்கும் ஐம்பதிற்கும் உள்பட்டவராக இருத்தல் விரும்பத்தக்கது. சி. எஸ். கே. மில், யாழ்ப்பாணம். 6412

வீட்டில் சமையல் வேலை செய்வதற்கு வயது நாற்பதிற்கும், ஐம்பதிற்கும் உள்பட்ட பெண் தேவை. நேரில் வரவும். சி. எஸ். கே. மில், யாழ்ப்பாணம். 6413

## CLASSES

I C M A, A C A. Chartered Accountancy classes just commenced Saturd ys 2—6 p.m. Sundays 8-30—12-30 a m. at the Education Centre, No. 22, Ramiah Chettiar Lane, Hospital Road Jaffna. 6403

## பயிற்சி

வெல்டிங் (Electric & Gas) இலெக்றிக் வயறிங் ரேடியோ (Transistor) PMG Certificate வகுப்புகள். கல்வி இலாகாவினால் தொழிற்பயிற்சி நிலையமென அத்தாட்சிபெற்ற இலங்கையின் ஒரே தனியார்துறை நிலையம் இதுவே. O/L, A/L, GAQ B.A. ஆங்கில வகுப்புகள் ஆங்கில (சிறப்பு) பட்டதாரியினால் நடாத்தப்படும். National Institute of Engineering Technology. மயிற் மண்டபம் 128, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 6365

## விற்பனைக்கு

''நீமியா உரம்'' மண்ணை வளம்படுத்தி, அதிக விளைவைத் தந்து பயிர்களைப் பாதுகாக்க சிறந்த ''நீமியா பசளையை பாவியுங்கள். மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம், யாழ்ப்பாணம். 6383

## சேவை

உங்களிடம் உள்ள காஸ் சிகரெட் லைட்டர்களுக்கு (Cigarett Lighter gas) காஸ் நிரப்பித் தரப்படும். முஹம்மதலிஅப்துலலி, 5&7, கிருண்ட் பஜார், யாழ்ப்பாணம். போன்: 515. 6416

## தவறிவிட்டதா?

பண்ணை அநாதை இல்ல மாணவன் பீ. ஜீவாகரன் வீதியில் பணம் கண்டெடுத்து அநாதை இல்லத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவரி அத்தாட்சி காட்டிப் பெற்றுக் கொள்க. 6418

## ஏலவிற்பனை

மானிப்பாய் விசேட ஆணையாளர் அலுவலகத்தில் உள்ள இருபத்தெட்டு அலுமினியத் தகரங்களும், பழுதடைந்த பனம் திராந்திகளும், ஆறு பாலை மரக்கட்டைகளும் 22-6-77ந் திகதி காலை 10-00 மணிக்கு ஏலத்தில் விற்கப்படும். கூடிய கேள்விக்காரர் முழுப்பணத்தையும் உடனடியாகச் செலுத்தி குறித்த பொருட்களை மூன்றுநாட்களுக்குள் அப்புறப்படுத்தல்வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு மானிப்பாய் விசேட ஆணையாளர் அலுவலகம் செயலாளருடன் தொடர்புகொள்ளவும்.

விசேட ஆணையாளர்,
மானிப்பாய் பட்டினம்.
விசேட ஆணையாளர்,
அலுவலகம்,
மானிப்பாய் பட்டினம்,
மானிப்பாய். 6420

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
சிவாஜி கணேசன், பத்மபிரியா, முத்துராமன்
சகுந்தலா, பாலாஜி
நடித்த



ஸ்ரீதரின்
வைர நெஞ்சம்
கதை, வசனம், டைரக்ஷன்: ஸ்ரீதர் (ஈஸ்மன் கலர்)
குறிப்பு; ஜனத்திரள் அலைமோதுவதால் காட்சி நேரங்கள் குறிப்பிடமுடியாமைக்கு வருந்துகிறோம்.
வெளியில் வாங்கும் ரிக்கட்டுகள் செல்லுபடியாகாது

ஈழநாடு
The EELANADU

# "கூட்டணி வெற்றியை உலக நாடுகள் எதிர்பார்க்கின்றன"

## சில்லாலையில் அமிர் உரை

பண்டத்தரிப்பு, வெள்ளி

'சர்வதேச அரங்கில் எங்கள் உரிமைப் போராட்டத்திற்கு ஆதரவு அதிகரித்து வருகின்றது. பல உலக நாடுகள் எமது கூட்டணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தை அனுப்பி வைக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளன. எதிர் வரும் தேர்தலில் கூட்டணியின் வெற்றியை உலக நாடுகள் பலவும் மிகுந்த அக்கறையோடு எதிர் பார்க்கின்றன. நாங்கள் தமிழ் மக்கள் முன்பு வைத்துள்ள தமிழ்ஈழக் கோரிக்கைக்கு இத் தேர்தலில் பூரண ஆதரவு தந்தால் எங்கள் உயிரைக் கொடுத்தாவது தனித்தமிழ் ஈழம் ஒன்றை அமைப்போம் என்பதை இங்கு உறுதியுடன் தெரிவிக்க விரும்புகின்றேன்,

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயல் அதிபர்களில் ஒருவரான திரு. அ. அமிர்தலிங்கம் சில்லாலையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார். வைத்திய கலாநிதி சுகந்தன் இன்னுசித்தம்பி தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. அமிர்தலிங்கம் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது;

'தமிழ் பேசும் இனம் உரிமைகள் பெற்றுச் சுயநிர்ணயத்தை நிலைநாட்டி இந்த நாட்டில் சுதந்திரமாக வாழ்வதா அல்லது இரண்டாந்தரப் பிரஜைகளாக அடிமை வாழ்வு வாழ்வதா என்பதை இத்தேர்தலில் முடிவு செய்ய வேண்டியது அவசியமாகும். கிழக்கு பாகிஸ்தானில் தேர்தல் நடைபெற்ற போது அப்போது அதன் ஒரு பகுதியாக இருந்த பங்களா தேசத்தில் அவாமி லீக் கட்சித் தலைவர் முஜிபுர் ரஹ்மான் தனிநாடு தனிநாடு பெறுவதற்கு தமது கட்சிக்கு ஆதரவு அளிக்குமாறு அங்குள்ள மக்களுக்கு அறைகூவல் விடுத்தார். அதன்பிரகாரம் இரு தொகுதிகளைத் தவிர மற்றைய சகல தொகுதிகளிலும் அவரது அவாமி லீக் கட்சி அமோக வெற்றி பெற்றதுடன் தனிநாடு அமைப்பதற்குப் போராடி வெற்றி பெற்றது சமீபத்திய வரலாறு ஆகும். அதுபோல தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர்களை அமோகமாக தேர்தலில் தெரிவு செய்து அனுப்பினால் தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்து தீரமுடன் போராடுவார்கள்'

கூட்டத்திற்கு தலைமை வகித்த வைத்திய கலாநிதி சுகந்தன் இன்னுசித்தம்பி தமது உரையின் போது, 'எங்களுக்கு உரிமைகள் பெற்று தன்மானமிக்கவர்களாக வாழ்வது தான் இலட்சியம். சிறுசிறு சலுகைகளுக்காகத் தொடர்ந்தும் மக்கள் தவருன வழியில் போகக் கூடாது' என்று குறிப்பிட்டார்.

திருமதி மங்கையற்கரசி, வட்டுக்கோட்டைத் தொகுதி கூட்டணி வேட்பாளர் திரு. தா. திருநாவுக்கரசு, சட்டத்தரணி மு. திருநாவுக்கரசு, சிறைமீண்ட இளைஞர் திரு. த. சந்ததியார், முன்னுள் பண்டத்தரிப்புப் பட்டண சபைத் தலைவர் திரு. இ. செல்வரத்தினம், திரு. சபா நராயணன் உட்படப்பலர் இக் கூட்டத்தில் உரையாற்றினுர்கள். (அ)

---

## "திரைப்படக் கவர்ச்சியில் மயங்கி விடாதீர்'

### காங். தலைவர் வேண்டுகோள்

சென்னை, ஜூன் 10

"திரைப்பட கவர்ச்சியில் மயங்கிவிடவேண்டாம்" என்று காங்கிரஸ் தலைவர் திரு. பிரமானந்தரெட்டி தமிழக மக்களைக் கேட்டுக்கொண்டார்.

திருச்சியில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் அவர் மேலும் பேசுகையில், "காங்கிரஸ் கட்சியைத்தாக்குவதிலேயே ஜனதா கட்சி காலத்தைக் கடத்துகிறது.

மாநில சுயாட்சி கோரும் தி. மு. க. வும், அ. இ. தி. மு. கவும் 9 மாநிலங்களை அரசு கலைத்தபோது அதனைஎதிர்த்து ஏன்குரல்எழுப்பவில்லை?" என்று வினவினுர். (உ)

---

சட்டசபைத் தேர்தல்கள்

## காவியுடை தரித்த

### சந்நியாசிகளும் வாக்களித்தனர்

புதுடில்லி, ஜூன், 10

ஒரிஸா, உத்தரப்பிரதேசம், ராஜாஸ்தான், ஹிமாசல், பீகார், மத்திய பிரதேசம் உட்பட ஏழு மாநிலங்களில் இன்று சட்டசபை தேர்தல் வாக்களிப்பு மந்தகதியில் நடைபெற்றது.

ஒரிஸாவில் லோக் சபா தேர்தல் வேளையின்போது காணப்பட்ட உற்சாகம் காணப்படவில்லை. அந்நேரம் காணப்பட்ட நீண்ட கியூ வரிசை இத்தேர்தலில் இருக்கவில்லை.

பீகார்மாநிலத்தைச் சேர்ந்த சில வாக்காளர்கள் மூன்று மைல் தொலைவு நடந்துவந்து வாக்களித்தனர். காவியுடை யணிந்த சந்நியாசிகளும் வாக்களித்தனர். (உ)

---

## மயிலணி கந்தசுவாமி உற்சவம்

யாழ்ப்பாணம், சனி

சுன்னுகம் மயிலணிக்கந்தசுவாமிகோவில் உற்சவம் இம்மாதம் 13-ந் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. திருவிழா தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறும். விழா நாட்களில் தினமும் இரவு 7-30 மணி தொடக்கம் 8-30 மணிவரை சைவ அறிஞர்களின் சொற்பொழிவுகள் இடம்பெறும். (அ)

---

## "ஐ. தே. க. ஏழைகளின் கண்ணீர் துடைக்கும்"

யாழ்ப்பாணம், சனி

"பொதுத்தேர்தல் நெருங்கும் நேரத்தில் இரண்டு சேகாத்து அரிசியையும் இறக்குமதி ரின்மீன்களையும், கொடுத்து மக்களை ஏமாற்றிவிட முடியாது. கடந்த ஏழு ஆண்டுகள் மக்கள் பட்ட கஷ்டங்கள்பல" என்று மானிப்பாய் தொகுதி ஐ. தே. கட்சி வேட்பாளர் திரு. எஸ். அலோஷியஸ் சுதுமலையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் கூறினுர்,

திரு. எஸ். சூரியகுமார் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் அவர் மேலும் பேசுகையில் "மக்கள்பட்டினி கிடக்கும்போது அரசாங்கம் ஜனநாயகம் பற்றிப் பேசுவதில் அர்த்தமில்லை. விவசாயத் துறையை வளர்க்கிருேம் என்பவர்கள் விவ்சாயிகளுக்கு பசளைகளைக்கூட வழங்கவில்லையே. ஏழைமக்களின் கண்ணீர் துடைக்க ஐ. தே. கட்சியே பாடுபடும்' என்ருர்.

மானிப்பாய்த் தொகுதி ஐ. தே. க. உறுப்பினர்கள் அமைதி காத்து தேர்தல் நேரம் பணி புரியவேண்டும் என்றும் திரு. அலோசியஸ் வேண்டுகோள் விடுத்தார். [உ]

---

## யாருடைய பணம்?

யாழ்ப்பாணம், சனி

வண்ணை சிவன்கோவில் வடக்கு வீதியில் சிறுதொகை பணம் கண்டெடுத்து வைத்தீஸ்வரக் கல்லூரி மாணவரான செல்வன் பி. ஜீவகரன் பண்ணை அநாதை இல்லப் பொறுப்பாளரிடம் ஒப்படைத்துள்ளார். மாணவனின் முன்மாதிரியைப் பாராட்டிய இல்லப் பொறுப்பாளர் பிர. பாலகிருஷ்ணன், உரியவர் அத்தாட்சிகாட்டி பணத்தைப் பெற்றுக்கொள்ளும்படி அறிவித்துள்ளார். இம் மாணவர் அநாதை இல்லத்தில் வசிப்பவராவார். (அ)

---

நயினை உற்சவம்

## ஆலோசனைக் கூட்டம்

வேலணை, வெள்ளி

இம்மாதம் 16ம்திகதி ஆரம்பமாகும் நயினுதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன்கோவில் வருடாந்த உற்சவத்தையொட்டிய சகல ஒழுங்குகளையும் மேற்கொள்ளும் பொருட்டு இம்மாதம் 13-ம் திகதி மேற்படி கோயிலில் வேலணை உதவி அரசாங்க அதிபர் திரு. மு. சுப்பிரமணியம் தலைமையில் ஆலோசனைக் கூட்டமொன்று நடைபெறவிருக்கின்றது.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் படகுச்சொந்தக்காரர்கள் இ. போ. ச. அதிகாரிகள், தொண்டர்சபைப் பிரதிநிதிகள் கோவில்தர்மகர்த்தசபையினர் ஆகியோர் கலந்து கொள்வர். (இ)

---

## சேவைநலம் பாராட்டு

யாழ்ப்பாணம், சனி

திரு. பொ. செல்வரத்தினத்தின் சேவைநலம் பாராட்டு விழா இன்று மாலை யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறுகிறது. யாழ். கூட்டுறவுக் கல்லூரி பொறுப்பதிகாரி திரு. சு. சிவப்பிரமணியம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பல கூட்டுறவுப் பிரமுகர்கள் உரையாற்றுவார்கள்.

கலைநிகழ்ச்சிகளும் இடம் பெறும். (இ)

---

## ரயில் சேவை—

(1ம் பக்கத் தொடர்ச்சி)

காங்கேசன்துறையை நோக்கி யாழ்தேவி கடுகதி ரயில் புறப்பட்டு மாலை 3-45க்கு யாழ்ப்பாணத்தை வந்தடையும்.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு காலை கடுகதியும் மாலை தபால்வண்டியும் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு காலை கடுகதியும் மாலை தபால்வண்டியும் மட்டுமே சேவையில் ஈடுபடுத்தப்படும்.

நேற்று மாலை கொழும்பில் இருந்து தபால் ரயில் யாழ்ப்பாணம் புறப்பட்டதாகவும் இன்று மாலை யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு தபால் ரயில் செல்லும் என்றும் ரயில்வே அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பார்சல்களும் இன்னும் ஏற்கப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இரவு 'மெயில்' ரயில் சேவை வழக்கம்போல நடைபெறும். (ம-இ)

---

## விரைவில் ஆரம்பம்!

வடக்கு, வடமத்திய மாகாணத்திலுள்ள வியாபாரிகள், பொதுமக்களின் வசதிக்காக இலங்கைத் தோல் பொருட் கூட்டுத்தாபனம் 8, 9, 10, ஹரிச்சந்திர மாவத்தை, அனுராதபுரத்தில் புதிய டி. ஐ. மொத்த விநியோக, சில்லறை விற்பனை நிலையத்தை 1977 ஜூன் 15ம் திகதி ஆரம்பிக்கவிருப்பதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கின்றது.

அறிமுக ஆரம்பச் சில்லறை விற்பனை விலையில் ஜூன் 15ம் திகதி முதல் ஜூலை 14ம் திகதி வரை வாங்கலாம்.

இலங்கை தோல் பொருட் கூட்டுத்தாபனம்

DI FOOTWEAR

டி. ஐ. அசல் தோல் பாதணிகள் உங்கள் பாதங்களைப் பேணுபவை. 6408

---

## பாதிப்பு!

யாழ்ப்பாணம், சனி

யாழ். கட்டட பொருட்கள் கூட்டுஸ்தாபன கிளை கடந்த சில தினங்களாக பூட்டப்பட்டிருப்பதனல் பொது மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இங்குகடமையாற்றும் ஊழியர்கள் கூட்டுத்தாபனத்திற்கு வெளியில் நிற்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதுபற்றி தலைமையலுவலகத்திற்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (க)

---

## எழுதுவினைஞர் சங்க யாழ். கிளைச் செயலாளர் இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம், சனி

அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் யாழ்ப்பாணக்கிளை செயலாளர் திரு. செ. பரராசசிங்கம் மேற்படி சங்கக்கிளையின் செயற்குழுவினுல் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்.

கடந்த காலங்களில் இக்கிளை செயலற்று இருந்ததற்கு இவர் காரணமாக இருந்ததாகவும், எதிர்வரும் பொதுத்தேர்தலையொட்டியும் இவர் செயலாளர் பதவியிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டதாகத் தெரிகின்றது.

அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் யாழ். கிளை செயற்குழுக்கூட்டம் நேற்று யாழ். செயலகத்தில் கிளைத்தலைவர் திரு. இ. கிருஷ்ணபிள்ளை தலைமையில் நடைபெற்றது. கிளையின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தை எதிர்வரும் 29ம் திகதி நடத்துவதென்று செயற்குழு முடிவுசெய்தது. கிளையின் தற்காலிக செயலாளராக திரு. செ. கனகரத்தினம் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

---

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977 ம் ஆண்டு ஜூன் மாதம் 11-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu P. O. Box 49, Jaffna. Telegram Eelanaadu Telephone 389 Registered as News paper in SriLanka.